Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.1 , Page.No.74/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நாகராஜன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | முருகன் | தொழில் | கூலி வேலை |
| கிராமம் | திருப்பத்தூர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 63 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 1st day of August 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி சிவா (எ) சிவக்குமார் ஆஜரில் இல்லை )**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரை தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு நான் இடம் விற்பனை செய்யும் தரகர் வேலை செய்துக்கொண்டு இருந்தேன். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரது நிலத்தை வழக்கறிஞர் திரு.சாமுடி என்பவர் கிரையம் பெற்றார். அது தொடர்பாக பத்திர பதிவு செய்ய பதிவு அலுவலகத்தில் பதிவு முடித்த பின்பு சுமார் ரூ.3 லட்சத்திற்கு மேல் வழக்கறிஞர் திரு.சாமுடி பட்டியல் சாட்சி 1 லிங்கேஷனிடம் கொடுத்தார். பின்பு பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் அந்த பணத்தை தனது டி.வி.எஸ் வாகனத்தில் வைத்துக்கொண்டு தனது வீட்டிற்கு சென்றார். பின்பு கால் மணிநேரம் கழித்து பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் தனது மாமா பட்டியல் சாட்சி 2 மாறன் என்பவருக்கு தொலைபேசி வாயிலாக தான் எடுத்துச்சென்ற பணம் திருடுபோய்விட்டதாக தகவல் கூறினார். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

பத்திரபதிவு அலுவலகத்தில் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவர் பணத்தை பெற்றுசென்ற விவரம் மட்டும் தான் எனக்க நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அவர் கொண்டு போன பணம் எங்கு திருடுபோனது யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.2 , Page.No.73/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மணிவண்ணன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | பெரியகுழந்தை | தொழில் | விவசாயம் |
| கிராமம் | சாலை நகர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 1st day of August 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி சிவா (எ) சிவக்குமார் ஆஜரில் இல்லை )**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரை தெரியும். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரும் வழக்கறிஞர் திரு.சாமுடி அவர்களும், இடம் விற்பனை தொடர்பாக சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு வழக்கறிஞர் திரு.சாமுடி என்பவர் ரூ.3 லட்சம் பணத்தில் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரிடம் கொடுத்தார். பின்பு பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் அந்த பணத்தை தனது டி.வி.எஸ் வாகனத்தின் பெட்டியில் வைத்துக்கொண்டு தனது வீட்டிற்கு கிளம்பினார். நான், அ.சா.1 மற்றும் ரெட்டியார் ஆகியோர்கள் பதிவு அலுவலகத்திலே இருந்தோம். கால் மணி நேரம் கழித்து காண்வண்ட அருகே பணம் திருடுபோய்விட்டதாக பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் மீண்டும் பதிவு அலுவலகத்திற்கு வந்தார். அவரிடம் விசாரித்தபோது, தான் பணத்துடன் சென்றுக்கொண்டு இருந்ததாகவும் அப்போது ஒரு நபர் தனது பணம் கீழே விழுந்து கிடக்கிறது என்று கூறியதாகவும், தான் கீழே விழுந்து கிடந்த பணத்தை எடுத்துக்கொண்டு இருந்தபோது தனது இருசக்கர வாகனத்தில வைத்திருந்த பணத்தை ஒருவர் எடுத்துச்சென்றுவிட்டதாக எனக்கு தகவல் கூறினார். பின்பு இது தொடர்பாக பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

பத்திரபதிவு அலுவலகத்தில் பணத்தை வழக்கறிஞர் திரு.சாமுடி என்பவர் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரிடம் பணத்தை கொடுத்தார். அவர் பணத்தை பெற்றுசென்ற விவரம் மட்டும் தான் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அவர் கொண்டு போன பணம் எங்கு திருடுபோனது யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மற்றபடி நான் சொன்ன சாட்சியம் அனைத்தும் கேள்விபட்டது தான் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் பணம் திருடுபோனதாக என்னிடம் பொய்யாக கூட சொல்லியிருக்கலாம் என்றால் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.3 , Page.No.74/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சம்பத் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | லிங்கா ரெட்டி | தொழில் | விவசாயம் |
| கிராமம் | பால்னாங்குப்பம் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 70 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 1st day of August 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி சிவா (எ) சிவக்குமார் ஆஜரில் இல்லை )**

**நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரை தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 யும் எனக்கு தெரியும். சுமார் 10 ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை. மதிய நேரத்தில் பத்திர பதிவு அலுவலகத்திற்கு நானும், வழக்கறிஞர் திரு.சாமுடி, அசா.1 மற்றும் அசா.2 ஆகியோர்கள் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவர் அவரது நிலத்தை வழக்கறிஞர் திரு.சாமுடி அவர்களுக்கு கிரையம் செய்து கொடுப்பது சம்மந்தமாக வந்திருந்தோம். வழக்கிறஞர் திரு.சாமுடி அவர்கள் சுமார் ரூ.3 லட்சம் ரூபாயை கிரைய தொகையாக பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரிடம் கொடுத்தார். அதை பெற்றுக்கொண்டு பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் அவரது டி.வி.எஸ் எக்சல் வாகனத்தில் எடுத்துச்சென்றார். கால் மணிநேரம் கழித்து பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன், பட்டியல் சாட்சி 2 மாறன் என்பவரை தொடர்பு கொண்டு தான் எடுத்துச்சென்ற பணம் திருடுபோய்விட்டதாக தகவல் கூறினார். மீண்டும் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் பத்திர பதிவு அலுவலகத்திற்கு வந்தார் அதன் பிறகு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.**

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.-**

**பத்திரபதிவு அலுவலகத்தில் பணத்தை வழக்கறிஞர் திரு.சாமுடி என்பவர் பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் என்பவரிடம் பணத்தை கொடுத்தார். அவர் பணத்தை பெற்றுசென்ற விவரம் மட்டும்**

தான் எனக்கு நேரடியாக தெரியும் என்றால் சரிதான். அவர் கொண்டு போன பணம் எங்கு திருடுபோனது யார் திருடினார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மற்றபடி நான் சொன்ன சாட்சியம் அனைத்தும் கேள்விபட்டது தான் என்றால் சரிதான். பட்டியல் சாட்சி 1 லிங்கேஷன் பணம் திருடுபோனதாக என்னிடம் பொய்யாக கூட சொல்லியிருக்கலாம் என்றால் எனக்கு தெரியாது.

**மறு விசாரணை:** இல்லை.

Signature of Witness